செ.தி.எண்: 247 நாள்: 9/12/2011

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

அறிக்கை – 9.12.2011

திருவண்ணாமலை மாவட்ட ஆயுதப் படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு.R.ஈஸ்வரன் என்பவர் 16.11.2011 அன்று மின்சார விளக்குகளைப் பழுது பார்க்க வேண்டி, மாவட்ட விளையாட்டு அரங்க வளாகத்திலிருந்து அலுமினிய ஏணியை தள்ளிக் கொண்டு வரும் போது, சாலையின் குறுக்கே செல்லும் மின்சார கம்பியில் உரசி மின்சாரம் தாக்கியதால் தீக்காயம் ஏற்பட்டு, பின்னர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 7.12.2011 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

காவலர் திரு. ஈஸ்வரன் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. ஈஸ்வரன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கி காலமான காவலர் திரு.R.ஈஸ்வரன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9